அனுப்புநர்
திரு.பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப.,
இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,
பனகல் கட்டிடம்,
சைதாப்பேட்டை, சென்னை–15.

பெறுநர்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
(வளர்ச்சிப் பிரிவு),
மதுரை மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள்.

ந.க.எண்.62846/2021/பி2 நாள்.26.11.2021.

பொருள்: பணியமைப்பு – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – தேர்வுகள்- துறைத் தேர்வுகள் – டிசம்பர்–2020 (பிப்ரவரி 2021–ல் நடைபெற்றது) – Tamil Nadu Government Office Manual Test – Two (Objective Type – Without Books and Descriptive Type With Books (T.C.172) – கொள்குறி வகை தேர்வுக்கு மட்டும் வருகைப் புரிந்து விரிந்துரைக்கும் வகை தேர்விற்கு வருகை புரியாததால் விண்ணப்பதாரர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது– தொடர்பாக.

பார்வை: துணைச் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண்.2230/DTD-B1/2021, நாள். 26.10.2021.

*****

பார்வையில் காணும் கடிதங்கள் மீது தங்களின் கவனம் கொணர விழைகிறேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறையில் பணிபுரியும் திரு.T.S.விஷ்ணு இளநிலை உதவியாளர், மேற்கு பஞ்சாயத்து யூனியன், தல்லாக்குளம், மதுரை மாவட்டம் மற்றும் திரு.M.மூர்த்தி, ஊராட்சி செயலாளர், அம்மா களத்தூர், விழுப்புரம் மாவட்டம் ஆகிய விண்ணப்பதார்கள் Tamil Nadu Government Office Manual Test – Two (Objective Type – Without Books and Descriptive Type With Books (T.C.172) என்ற துறைத் தேர்வினை டிசம்பர்–2020 (பிப்ரவரி–2021–ல் நடைபெற்றது) எழுதிய போது கொள்குறி வகை தேர்விற்கு மட்டும்(Objective Type) வருகை புரிந்து விரிந்துரைக்கும் வகைத் தேர்விற்கு (Descriptive Type) வருகை புரியவில்லை. துறைத் தேர்வு எழுதும் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் XIII (9)–ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> தேர்வுக் குறியீட்டு எண்கள் 049 முதல் 075 மற்றும் 101 முதல் 177 (112 மற்றும் 135 நீங்கலாக) வரையிலான அனைத்துத் துறைத்தேர்வுகளுக்கும் விண்ணப்பதாரர்கள் கொள்குறி வகை மற்றும் விரிவான விடை எழுதும் வகையென அமைய பெற்ற இரண்டு வகைத் தேர்வுகளுக்கும் கட்டாயமாக வருகை புரிய வேண்டும். அவ்வாறு வருகை புரிய தவறினால், அதாவது கொள்குறி வகை தேர்விற்கு வருகை புரிந்து ஆனால் விரிவான விடை எழுதும் தேர்வினை எழுதாமல் தேர்வு நேரத்தில் பாதியில் செல்லும் விண்ணப்பதாரர்கள்

Scanned with CamScanner

Scanned with CamScanner

குறித்து ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்காக வேண்டி அவர் பணிபுரியும் துறைத் தலைவருக்கு தெரிவிக்கப்படும்.

எனவே மேற்கண்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரர்கள் திரு.T.S.விஷ்ணு (பதிவெண்.201218428), திரு.M.மூர்த்தி (பதிவெண்.201245752), ஆகியோர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்திற்கு விரைவில் தெரிவிக்குமாறு பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவாறு மேற்கண்ட இரண்டு பணியாளர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு விவரத்தினை இவ்வியக்ககத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு: தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வணைய
கடித நகல்.

கோவிந்த சாரான்
30.11.2021
இயக்குநருக்காக

3/11/21

நகல்:

1 மாவட்ட ஆட்சித் தலைவர்,
(வளர்ச்சிப் பிரிவு).
அனைத்து மாவட்டங்கள்.
(சென்னை நீங்கலாக),
(அனைத்து சார் அலுவலகங்களுக்கும் தகவல் தெரிவிக்கும் பொருட்டு).

2 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,
பொது–1 பிரிவு, சைதாப்பேட்டை,
சென்னை–600 015.

3 செயலாளர்,
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வணையம்.
சென்னை–600 003.

Scanned with CamScanner

Scanned with CamScanner

By Rpad

B2

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

62846

அனுப்புநர்

க.பிரபாகரன்,

துணைச் செயலாளர்,

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்,

சென்னை-600 003.

பெறுநர்

ஆணையர்,

ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை,

பனகல் மாளிகை, சைதாபேட்டை,

சென்னை - 600 015.

கடித எண்/2230/DTD-B1/2021. நாள் 26.10.2021

அய்யா,

பொருள்:- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - தேர்வுகள் - துறைத் தேர்வுகள் - டிசம்பர் - 2020 (பிப்ரவரி-2021-ல் நடைபெற்றது) - Tamil Nadu Government Office Manual Test - Two Parts (Objective Type -Without Books and Descriptive Type With Books) (T.C.172) - கொள்குறி வகை தேர்விற்கு மட்டும் வருகைப் புரிந்து விரிந்துரைக்கும் வகை தேர்விற்கு வருகை புரியாததால் விண்ணப்பதாரர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது - தொடர்பாக.

*******

ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறையில் பணிபுரியும் திரு.T.S.விஷ்ணு இளநிலை உதவியாளர், மேற்கு பஞ்சாயத்து யூனியன், தல்லாகுளம், மதுரை மாவட்டம் மற்றும் திரு.M.மூர்த்தி, ஊராட்சி செயலாளர், அம்மா களத்தூர், விழுப்புரம் மாவட்டம் ஆகிய விண்ணப்பதாரர்கள் Tamil Nadu Government Office Manual Test - Two Parts (Objective Type -Without Books and Descriptive Type With Books) (T.C.172) என்ற துறைத் தேர்வினை டிசம்பர் - 2020 (பிப்ரவரி-2021-ல் நடைபெற்றது) -எழுதிய போது கொள்குறி வகை தேர்விற்கு மட்டும் வருகை புரிந்து, விரிந்துரைக்கும் வகைத் தேர்விற்கு வருகை புரியவில்லை. துறைத் தேர்வு எழுதும் விண்ணப்பதார்களுக்கான விதிமுறைகள் XIII (9)-ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது

"தேர்வுக் குறியீட்டு எண்கள் 049 முதல் 075 மற்றும் 101 முதல் 177 (112 மற்றும் 135 நீங்கலாக) வரையிலான அனைத்துத் துறைத்தேர்வுகளுக்கும் விண்ணப்பதாரர்கள் கொள்குறி வகை மற்றும் விரிவான விடை எழுதும் வகையென அமையப் பெற்ற இரண்டு வகைத் தேர்வுகளுக்கும் கட்டாயமாக

Scanned with CamScanner

Scanned with CamScanner

வருகை புரியவேண்டும். அவ்வாறு வருகை புரிய தவறினால், அதாவது கொள்குறி வகை தேர்விற்கு வருகை புரிந்து ஆனால் விரிவான விடை எழுதும் தேர்வினை எழுதாமல் தேர்வு நேரத்தில் பாதியில் செல்லும் விண்ணப்பதாரர்கள் குறித்து ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்காக வேண்டி அவர் பணிபுரியும் துறைத்தலைவருக்கு தெரிவிக்கப்படும்.”

எனவே, மேற்கண்ட விதிமுறைகளின் படி விண்ணப்பதாரர்கள் திரு. T.S.விஷ்ணு. (பதிவெண் : 201218428), திரு M.மூர்த்தி (பதிவெண் : 201245752), ஆகியோர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு, இவ்வலுவலகத்திற்கு விரைவில் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ள பணிக்கப்பட்டுள்ளேன்.

துணை செயலாளருக்காக

Scanned with CamScanner

Scanned with CamScanner